## தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை - 2016

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 43 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

(அ) நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண உருப்படிகள் மீள்மதிப்பீடு செய்யப்படுகையில் அச்சொத்துக்களுக்குரிய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண அணி முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதியில் முறையே ரூபா 226,305,369 மற்றும் ரூபா 274,738,714 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் என்பவற்றில் கொட்டுவ ஆதிபாத வீதியில் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்கள் மாத்திரம் 2012 ஆம் ஆண்டின்போது மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருந்தன.

(ஆ) நியமத்தின் 65 ஆம் பிரிவின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 60,430,940 பெறுமதியான மோட்டார் வாகனங்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீட்டு பிழைகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்ககூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள அலுவலக தளபாடங்களின் ஆரம்ப மீதி மற்றும் கொள்வனவுகள் முறையே ரூபா 29,332,629 மற்றும் ரூபா 2,929,930 ஆக இருந்ததுடன், நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் ஆரம்ப மீதி மற்றும் கொள்வனவு ஆகியன முறையே ரூபா 35,314,434 மற்றும் ரூபா 2,749,920 ஆகும். இதன் பிரகாரம் ரூபா 5,981,805 மற்றும் ரூபா 180,010 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

அதிகாரசபையினால் 2006 ஆம் ஆண்டின் போது விவசாய சங்கமொன்றிற்கு வழங்கப்பட்ட ரூபா 2,000,000 தொகையான பணம் உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் 06 மாத காலத்தினுள் மீள செலுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 1,450,000 தொகையான பெற வேண்டிய மீதியொன்று நிலவியது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் நலன்புரி நிதிய அதிகாரச்சட்டத்தின் 47 (2) ஆம் பிரிவின் பிரகாரம், ஊழியர் நலன்புரி நிதிய பங்களிப்பினை கணிப்பிடும் போது வாழ்க்கைப்படி செலவினத்தை கவனத்திற் கொள்ளாமையால் 2006 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலும் 207 ஊழியர்களுக்காக ரூபா 5,914,009 தொகையான மிகை அறவீடு மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 96,418,633 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 169,146,980 ஆக இருந்தது. அதன் பிரகாரம், நிதி விளைவுகளில் ரூபா 72,728,347 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. பரீட்சிப்பு மற்றும் ஒழுங்கமைத்தல் கட்டண வருமானம் ரூபா 91,587,176 இனால் குறைவடைந்தமை மற்றும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி செலவினம் ரூபா 18,669,679 இனால் அதிகரித்தமையும் மேற்படி வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆண்டின் போது பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்த போதிலும், 2013 இலிருந்து மீளாய்வாண்டு வரை மிகையொன்று உருவாகியிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரச வரிகள் என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் போது அதிகாரசபையின் பங்களிப்பு 2012 ஆம் ஆண்டில் ரூபா 80,631,000 ஆக இருந்ததுடன், அது 2015 ஆம் ஆண்டு வரையிலும் கிரமமாக அதிகரித்திருந்தது. 2016 ஆம் ஆண்டிற்கான அதிகாரசபையின் பங்களிப்பு ரூபா 235,630,000 ஆகும். அது 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 27 சதவீதமான வீழ்ச்சியொன்றாகும்.

### 3.2 அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

அதிகாரசபையால் அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய பணம் தொடர்பில் கம்பனியொன்றுக்கும் நபரொருவருக்கும் எதிராக 02 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்பாடுகள் பின்வருமாறு.

(அ) தெங்கு கைத்தொழில் மற்றும் தெங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற காணிகளை பொருளாதார ரீதியாக பயன்பாட்டிற்கு எடுப்பது தொடர்பாக அபிவிருத்தி முன்னுரிமை தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கும் கொள்கைகளைத் தயாரிப்பதற்காகவும் அமைச்சருக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

(ஆ) அவ்வாறு தீர்மானிக்கப்படுகின்ற அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு இணங்க செயற்திட்டங்கள் மற்றும் முன்மொழிவு திட்டங்களைத் தயாரித்தல் அல்லது தயாரிப்பதற்காக ஒத்துழைத்தல், செயற்படுத்தல் அல்லது செயற்படுத்துவதற்கு ஒத்துழைத்தல், அதிகாரச்சட்டத்தின் கீழ் அமைச்சரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சபைகளின் செயற்பாடுகளை கூட்டிணைத்தல், வருடாந்த பாதீட்டை அங்கீகரித்தல் மற்றும் அவற்றுக்கு அவர்களுக்கு நிதி வழங்குதல், உரிய முகாமைத்துவ கணக்கீட்டு முறைமைகளைத் தயாரித்தல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்துச் செல்வதற்காக ஆலோசனை வழங்குதலும் ஒத்துழைப்பு வழங்கலும்.

(இ) அமைச்சரால் தீர்மானிக்கப்படுகின்ற அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் கொள்கைகள் தொடர்பாக சபைகளின் செயன்முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல், அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் சமமான உரிமைகள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுகின்ற சர்வதேச அமைப்புக்களுடன் ஒத்துழைப்புக்களை மேற்கொள்ளல்.

(ஈ) தெங்கு கைத்தொழில் மற்றும் அதன் உற்பத்தி தொடர்பாக ஏதேனும் பிரிவொன்றோ அல்லது தெங்கு பயிர்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற காணி மற்றும் தென்னை பயிர்ச்செய்கைக்காக காணிகளை பயன்பாட்டிற்கு எடுத்தல் தொடர்பாக விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் எவரேனும் நபர்களுக்கு தனிப்பட்ட சபையொன்றுக்கு நிதி மற்றும் வேறு ஏதேனும் வகையில் ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் அவ்வாறான ஆராய்ச்சி நடவடிக்கைகளை கூட்டிணைத்தல்.

(உ) தெங்கு கைத்தொழில் தொடர்பில் தாக்களிக்கும் அல்லது அனைத்து விடயங்கள் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும்

(ஊ) தெங்கு கைத்தொழில் அபிவிருத்தி செய்தல் மற்றும் மீள உயிரூட்டுதல் நடவடிக்கைகளுக்காக தேவையானது என அதிகாரசபை அபிப்பிராயப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிறுவனத்தின் நோக்கத்திற்கு புறம்பான செயற்பாடொன்றாக 1985 ஆம் ஆண்டின் போது தனியார் கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 26,715,037 தொகையான கடனுக்காக செலுத்த வேண்டிய வட்டிப் பணம் மற்றும் கடன் தவணை ஆகியன செலுத்தப்பட்டிராத போது மீண்டும் அந்த கம்பனிக்கு வட்டியின்றி 2002 ஆம் ஆண்டின் போது ரூபா 25,000,000 மற்றும் 2004 ஆம் ஆண்டின் போது ரூபா 6,600,000 படியாக ரூபா 31,600,000 தொகையான கடன் வழங்கப்பட்டுள்ளதுடன், அவற்றுள் ரூபா 31,550,000 தொகை இது வரையிலும் அதிகாரசபைக்கு அறவிடப்படாமல் இருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் பதிவு இரத்துச் செய்யப்பட்டிருந்த தேங்காய் துருவல் ஆலைகளின் அபிவிருத்தி நிதியமானது ஜய இசுறு முன்மொழிவு திட்டத்திற்கு ஈடுபடத்தப்பட்டிருந்த போதிலும், ஏதேனுமொரு தேங்காய் துருவல் ஆலையொன்று மீண்டும் இயங்கினால் அந்த ஆலைக்குரிய நிதியம் மீளளிக்கப்பட வேண்டும். எனினும் செயலிழந்த ஆலைகள் மீளாய்வாண்டில் மீண்டும் உற்பத்தியினை ஆரம்பித்திருந்த போதிலும், அந்த நிதியங்கள் மீண்டும் மீளளிக்கப்பட்டிருக்வில்லை.

(ஆ) அதிகாரசபையினால் தேங்காய் துருவல் உற்பத்திக்காக அறவிடப்படும் ஒரு கிலோ கிராமிற்கு 20 சதம் படியான பணம் 40 வருடங்களுக்கு முன்பு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், காலரீதியில் அந்த தொகையினை மீள்திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தேங்காப்பால், தேங்காய் பால்மா, தேங்காய் கிறீம் ஆகியவற்றை பொது மக்களிடையே பிரபல்யபடுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக இலங்கை வானொலி கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 3,936,228 மற்றும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 9,344,832 தொகை ஒரே தடவையில் செலுத்தப்பட்டிருந்த போதிலும், நடாத்தப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டங்களின் கிரயம் முறையே ரூபா 3,799,258 மற்றும் ரூபா 2,284,800 ஆகும். அதன் பிரகாரம் இலங்கை வானைாலிக் கூட்டுத்தாபனம் மற்றும் ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திடம் முறையே ரூபா 136,970 மற்றும் ரூபா 7,060,032 தொகை எஞ்சியிருந்ததுடன், அந்த பணத்தை அறவிடுவதற்கோ அல்லது அதற்கு பதிலாக வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் அதிகாரசபையினால் நடமாடும் இரசாயன ஆய்வுகூட வாகனமொன்று ரூபா 20 மில்லியனுக்கு கொள்வனவு செய்வதற்கு மதிப்பிடப்பட்டிருந்ததுடன், அந்த வாகனத்தை கொள்வனவு செய்வதற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் 2014 யூலை 30 ஆந் திகதி கிடைத்திருந்த போதிலும் கொள்வனவு நடவடிக்கைகள் இது வரையிலும் கொள்வனவு இடம்பெற்றிருக்கவில்லை.

## 4.3 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையில் தெங்கு உற்பத்திகள் தொடர்பில் ஏற்றுமதியாளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் தேங்காய் துருவல் தவிர ஏனைய உற்பத்திகளுக்காக தரப் பரிசோதனையொன்று அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படாததுடன், ஏற்றுமதியாளர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் மாத்திரம் அவ்வாறானதொரு பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

(ஆ) அதிகாரசபையினால் செல்மொனல்லா விஷமாகுதலை பரீட்சிப்பதற்காக ISO தரச் சான்றிதழ் கிடைத்திருந்த போதிலும், இலங்கை தராதர அங்கீகார சபையினால் அதிகாரசபையின் இரசாயன ஆய்வுகூடத்தில் காணப்பட வேண்டிய தேவையான பரிசோதனை உபகரணங்கள் இல்லாதிருந்தமை மற்றும் உரிய விடய இணைப்பு பகுப்பாய்வொன்று இல்லாதிருந்தமையால் மற்றுமொரு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்திடம் இரண்டாவது பரிசோதனையினை மேற்கொள்வதற்கு அதிகாரசபைக்கு நேர்ந்திருந்தது.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் ரூபா 1,068,886 தொகையான பணம் செலவிடப்பட்டு 2014 ஒக்தோபர் மாதத்தில் பொருத்தப்பட்டிருந்த CCTV கெமரா கட்டமைப்பின் 32 கெமராக்களில் 19 கெமராக்கள் செயலிழந்திருந்தன.

(ஆ) அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் இறுதியில் வங்கி நடைமுறை கணக்குகளில் ரூபா 28,594,785 தொகைப் பணம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் கோட்டை அலுவலகத்தின் உத்தியோகபூர்வ பணிகளுக்காக பயன்படுத்தப்படும் டயலொக் தொலைபேசி குறைபாடுகளுடனும் செயலிழந்தும் உள்ளமையால் அவற்றை துண்டிக்குமாறு பணிப்பாளர் நாயகத்தால் 2016 சனவரி 28 ஆந் திகதி வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றை துண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் 2015 செப்தம்பர் 29 ஆந் திகதி முதல் 2016 பெப்ரவரி 29 ஆந் திகதி வரை டயலொக் நிறுவனத்திற்கு ரூபா 529,907 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், அதிகாரசபையால் 2015 செப்தம்பர் மாதம் டயலொக் இணைப்பினை பெற்றுக்கொண்டதன் பின்னர் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த டெலிகொம் தொலைபேசி இணைப்பினை துண்டிக்காமையால் 32 தொலைபேசி இணைப்புகளுக்காக 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 91,200 தொகையும் மீளாய்வாண்டிற்காக ரூபா 304,000 தொகையுமாக ரூபா 395,200 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து வெளிவாரி நிறுவனமொன்றிற்கு கொள்வனவு நடைமுறையிலிருந்து விலகி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒவ்வொன்றும் ரூபா 1.70 படி 1,625,000 ஸ்டிகர்கள் மற்றும் ஒவ்வொன்றும் ரூபா 1.85 படி 3,875,000 ஸ்டிகர்களை அச்சிடுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 9,931,250 பெறுமதியான இரு கட்டளைகள் தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முறையே 2016 நவம்பர் 24 மற்றும் 2017 பெப்ரவரி 13 ஆகிய திகதிகளில் கிடைத்திருந்த மொத்த ஸடிகர்களின் 5,500,000 ஆன இருப்பில் 2017 மார்ச் 14 ஆந் திகதி வரையிலும் 375,000 ஸ்டிகர்கள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தன.

## 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ஊழியர் நலன்புரி நிதியத்திற்கான பங்களிப்பு தொகையினை செலுத்தும் போது வாழ்க்கைப் படி செலவினத்தை கருத்திற் கொள்ளாமையால் அந்த சந்தர்ப்பத்தில் ஊழியர்களால் செலுத்தப்பட வேண்டியதாக இருந்த வாழ்க்கைப்படி செலவினத்திற்குரிய 10 சதவீத நலன்புரி நிதிய பங்களிப்பான ரூபா 1,182,802 தொகையான பணம் அதிகாரசபையால் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய கொடுப்பனவுகள் தாமதமடைந்ததன் அடிப்படையில் நிலுவை பங்களிப்பு தொகையில் 50 சதவீதத்தை மிகை அறவீடாக செலுத்த வேண்டும். அதன் பிரகாரம், அதிகாரசபையால் கணக்காய்வு திகதியான 2017 சனவரி 05 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிராத ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்பிற்காக செலுத்த வேண்டிய மிகை அறவீட்டு தொகை ரூபா 708,624 ஆகும்.

### 4.7 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 258 ஆக இருந்ததுடன், உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை 193 ஆகும்.

(ஆ) 2009 ஆம் ஆண்டு முதல் பல்வேறு அமைச்சுகளுக்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்டிருந்த அதிகாரசபையின் அலுவலக உதவியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 204,886 தொகையான கடன் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

கடந்த வருடத்தின் உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பிடக்கூடிய வகையில் பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | தேவையான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை. |
| (ஆ) செயற்பாட்டு நிர்வாகம் | செயற்பாட்டு நிர்வாக செயற்திறனின்மையின் காரணமாக அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டமை. |
| (இ) கணக்கீடு | களஞ்சிய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு முறைமை நவீனமயப்படுத்தப்படாமை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | பெற வேண்டிய கணக்குகள் | நீண்ட காலமாக பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) | சொத்துக் கட்டுப்பாடு | சொத்துக்கள் செயற்திறனாக பயன்படுத்தப்படாமை. |